திரு. எஸ். எஸ். ராமசுப்பு : தலைவர் அவர்களே, சட்டமன்ற நிகழ்ச்சிகளுக்கு என்று அந்தத் தமிழரசு பத்திரிகையில் 2, 3 பக்கங்கள் ஒதுக்கி, அவற்றைப் போடுவதற்கு இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9—55 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களை மறுபடியும் அந்தக் கேள்வியைக் கேட்கு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

பாதுகாப்புக் காவலர்கள்.

*6752 திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பாதுகாப்புக் காவலர்களாகப் பணியாளர்களை காண்ட்ராக்ட் முறையில் தொழிலகங்களுக்கு அனுப்பும் ஏஜென்சி நிறுவனங்களின் ஊழியர்களுடைய பணி பாதுகாப்பு மற்றும் ஊதிய நிர்ணயம் தொடர்பாகச் சட்டம் இயற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இது போன்ற ஏஜென்சி நிறுவனங்களை காவல் துறையின் துணை அமைப்பாக அரசே ஏற்று நடத்த முன்வருமா?

மாண்புமிகு திரு கே. என். நேரு: தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளிலும், தொழிற் நிறுவனங்களிலும், தனியார்களின் கீழ் பாதுகாவலர்களாக பணி புரியும் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பினையும், பணிநிலை மைகளையும் முறைப்படுத்துவதற்கும், ஊதியம் மற்றும் இதர சலுகைகள் அளிப்பதற்கு வேண்டி தனியாகவே சட்டமொன்றை இயற்ற இந்த அரசு முடிவு செய்துள்ளது. மத்திய அரசின் இசைவு பெற்றதும், அதற்கான சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்படும்.

(ஆ) இல்லை. இதற்கென தனி வாரியம் ஒன்றை அமைத்து அதன் வாயிலாக தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற பணியில் ஈடுபடக்கூடிய தனியார் நிறுவனங்களை பெரும்பாலும் காவல் துறையிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகள் நடத்தி வருகிறார்கள். அங்கே அந்த ஊழியர்களுக்கு எந்தவிதமான பணி பாதுகாப்போ அல்லது உத்தரவாதமான கூலியோ இல்லாத

1990 மே 8]

அவல நிலை நீடிக்கிறது. ஆகவே, அவர்களுக்கு எல்லாம் பணிப் பாதுகாப்பும், ஊதிய நிலையில் முன்னேற்றமும் ஏற்படுவதற்கான இந்தச் சட்டத்தை விரைவில் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா? இந்தக் கூட்டத் தொடரிலேயே அதற்கான சட்டம் கொண்டு வரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, மொத்தம் 52 பாதுகாப்பு நிறுவனங்களில் கிட்டத்தட்ட 61,000 தொழிலாளர்கள் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் மகாராஷ்டிராவில் மட்டும்தான் இவர்களுக்கு என்று தனியாக ஒரு சட்டத்தை இயற்றி இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இதுபோன்ற கோரிக்கைகள் வந்த பிறகு, ஆணையர், துணை ஆணையர் மற்றும் நிர்வாக அலுவலர்களை மகாராஷ்டிராவிற்கு அனுப்பி, அந்தச் சட்டத்தின் மூலம் அந்தத் தொழிலாளர்கள் நல்லமுறையில் பயன்பெறுகிறார்களா என்பதை அறிந்து வரச் செய்து, அவர்கள் சென்று நல்லமுறையில் பயன் பெறுகிறார்கள் என்பதைத் தெரிந்து இன்றைக்கு தமிழ்நாடு அரசின் சார்பாக இதற்கென ஒரு சட்டமுன்வடிவை இயற்றி, முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலையும் பெற்று, மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. மத்திய அரசின் அனுமதி பெறப்பட்ட பிறகு—இந்தக் கூட்டத் தொடரிலேயே என்று சொல்ல முடியாது. மத்திய அரசு அனுமதி தந்தவுடன் சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன்: தலைவர் அவர்களே, இந்த ஏஜென்சி நிறுவனங்களில் கிட்டத்தட்ட 61,000 ஊழியர்கள் பணிபுரிகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அவற்றை ஒரே அமைப்பாக ஒன்று படுத்தவும்–காவல் துறையினுடைய துணை அமைப்பு என்று நான் குறிப்பிட்டு இருந்தேன். இருந்தாலும் ஒரு வாரியம் என்ற அடிப்படையில் ஏற்படுத்தலாம் என்று ஆலோசனை இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட முறையில் அவர்களுக்குப் பாதுகாப்பு தரக்கூடிய முறையில், அவர்களுக்கு நிச்சயமான ஊதியமும், தேவையான ஓய்வுகாலமும் உட்பட பணி நிலைமைகள் கிடைப்பதற்கான ஏற்பாட்டை விரைவாகச் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே இப்போது தான் மத்திய அரசின் இசைவு பெற்றவுடன் இவர்களுடைய நலன்களைக் கவனிப்பதற்கு என்றே தனியாகவே ஒரு சட்டம் இந்த அரசின் சார்பாக அறிமுகப்படுத்தப்படும் என்று சொன்னேன். அப்படி சட்டம் அறிமுகப்படுத்தப்படுமானால் நிச்சயமாக இவர்களுக்கு வழங்க வேண்டிய அத்தனை சலுகைகளும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சந்தனமரத் திருடர்களால் கடத்தப்பட்ட அதிகாரிகள்.

*6803 திரு. கே. ரமணி:
திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெரியார் மாவட்டம், வனப்பிரதேசமான பர்கூரில் 6-8-1989-ல் சந்தன மரங்களை திருடிக்கொண்டு போகும் கும்பல் ஒன்று இரண்டு வனத்துறை அதிகாரிகளையும் வேறு இரண்டு நபர்களையும் சேர்த்து நான்கு பேர்களையும் கடத்திக்கொண்டு போயுள்ளது பற்றி அரசுக்கு புகார் கிடைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவர்களை மீட்கவும், திருட்டுக் கும்பலைப் பிடிக்கவும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,

(அ) ஆம். வனத்துறைக்குப் புகார் வந்தது.

(ஆ) கடத்திச் செல்லப்பட்ட நான்கு பேர்களில், இரண்டு பேர் வனத்துறை அதிகாரிகள், மற்றும் இரண்டு பேர் பொது மக்களாவர். அதில், ஒருவர் முதலிலேயே தப்பி ஓடிவந்து வனத்துறை அதிகாரிகளிடம் விவரம் தெரிவித்தார். மீதி மூன்று பேர்களும் கடத்தல்காரர்களால் கொலை செய்யப்பட்டு, அவர்களது உடல்கள் 24-8-1989 அன்று கண்டுபிடிக்கப்பட்டன. இந்தக் கொலைக்காரர்களை காட்டுக் கொள்ளையர்களை பிடிக்க காவல்துறையினர் தீவிர முயற்சிகள் மேற்கொண்டுவருகிறார்கள்.

திரு. வி.கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, இந்தச் சந்தன மரங்களைத் தனியார் திருடிக்கொண்டு செல்வதோடு, இன்றைக்கு சத்தியமங்கலம் பகுதியில் இருக்கிற வன அதிகாரிகளே தேக்கு மரங்களையும், ஈட்டி மரங்களையும், சந்தன மரங்களுக்கு ஈக்குவலான மரங்களை, பல லட்சம் ரூபாய் மதிப்புள்ளதை, சத்தியமங்கலம் பகுதியில் இருக்கிற மலைப்பகுதி